23.06.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை. (ஒ.எஸ்.எண். 218 /2021 ) திரு.கோமதிநாயகம்.

<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) இந்த வழக்கில் எனது தரப்பில் ஐ.ஏ.எண்.577/2023 மனுதாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா இடத்தை சர்வேயர் சகிதம் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவாப்படும் இடத்திற்கு தெற்கு பக்கம் சங்கரன்கோவில் செல்லும் மெயின் தார்சாலை செல்கிறது என்றால் சரிதான். தாவாப்படும் இடத்திற்கு மேற்கு பக்கம் குருலெட்சுமி என்பவருக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவாப்படும் இடத்திற்கு வடபக்கம் காலிமனை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை வாசித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை வாசித்து பார்த்ததில் அறிக்கையில் கண்ட படி தாவாச்சொத்தின் நில அமைப்பும், அதன் பருதன்மை குறித்து எனக்குஎந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
22.06.2026.